**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4622

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.10.2021

Accepted: 13.11.2021

Published: 01.01.2022

Citation:
Raja, A., et al. "Thiruvedikudi Vedapuriswarar Temple Traditional Art and Field Research Datas." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 38–45, 2022.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4622

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Thiruvedikudi Vedapuriswarar Temple Traditional Art and Field Research Datas

**Dr. A. Raja**
*Head, Department of Museum, Tamil University, Thanjavur*
http://orcid.org/0000-0001-8820-2413

**Dr. T. Athithan**
*Associate Professor, Dept.of Rare Paper Manuscripts, Tamil University, Thanjavur*
http://orcid.org/0000-0001-9420-962X

**Dr. C. Velmurugan**
*Head, Department of Library and Information Science, Tamil University, Thanjavur*

**Abstract -** Thiruvedikudi Vedapuriswarar Temple is located in the Thiruvaiyaru taluk of Thanjavur district in Tamil Nadu. The complete structure and history of the temple is explained based on the field study done on the temple. The name of Lord Shiva who is the source here is Vedapuriswarar. The Goddess is seated in a separate shrine in the Mangaiyarkarasi temple. Inscriptions show that kings like Adithan I, Paranthakan I and Rajaraja I were involved in the restoration of this temple. The history of this temple said to be the place of worship of Brahman. It is also the destination sung by Thirugnanasambandar and Thirunavukkarasar. The article details the special features of the temple and the traditional Tamil architecture. This article is intended to be of great use to those who do further research on temple architecture and sculpture.

**Keywords:** Tamil Nadu Temples, Thiruvedikkudi Shiva Temple, Temple History, Ancient Traditional Arts, Field Work and Temple Studies, Temple Documentation, Cholas Land Mesurments.

**References**

1. Sridhar T Sri. 2005. *Thanjavur vattak kalvettukal thokuthi*, State Archaeology, Chennai, Department of Tamil Nadu.
2. Raja, A. *Kalai Panbaattu Thalathil Someswarar Thirukkoyil*, Shanlax International Journal Tamil Research, Vol-5, 2020, E.-ISSN:2582-2810.
3. 1895. Annual Report of Indian Epigraphy, Archaeological survey of India, New Delhi.
4. 1969. Annual report of Indian Epigraphy, Archaeological survey of India, New Delhi.
5. 1925. South Indian Inscritions, Vol.5, Archaeological survery of India. New Delhi, Nos.622-625.

# திருவேதிக்குடி வேதபுரீஸ்வரர் திருக்கோயில் மரபுசார் கலையும் கள ஆய்வு தரவுகளும்

*முனைவர் ஆ. ராஜா*
தலைவர், அருங்காட்சியகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

*முனைவர் த. ஆதித்தன்*
இணைப் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

*முனைவர் சி. வேல்முருகன்*
தலைவர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*திருவேதிக்குடி வேதபுரீஸ்வரர் கோயில் தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டத்தில் அமைந்துள்ளது. அக்கோயிலில் மேற்கொண்ட கள ஆய்வு அடிப்படையில் கோயிலின் முழுமையான அமைப்பும், வரலாறும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இங்கு மூலவராக இருக்கும் சிவனின் பெயர் வேதபுரீஸ்வரர். இறைவி மங்கையர்கரசி கோயிலில் தனி சன்னதியில் அமர்ந்திருக்கிறார். இந்த கோயிலின் திருப்பணியில் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன் முதலான மன்னர்கள் ஈடுபட்டுள்ளதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. இதன் தலவரலாறு பிரம்மனால் வழிபட்ட தலம் என்கிறது. அதேபோல திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடப்பட்ட தலமாகவும் திகழ்கிறது. இக்கோயிலின் சிறப்புகளையும், தமிழர் மரபுசார்ந்த கட்டடக்கலை குறித்தும் கட்டுரை விரிவாக எடுத்துரைக்கிறது. இக்கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை குறித்து மேல் ஆய்வுகள் செய்பவர்களுக்கு மிகவும் பயன் தரும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்நாட்டுக் கோயில்கள், திருவேதிக்குடி சிவன் கோயில், கோயில் வரலாறு, மரபு சார் கலைகள், களப்பணியிம் கோயில் ஆய்வும், கோயில் ஆவணப்படுத்துதல், சோழர் கால நிலஅளவு முறை.*

## முன்னுரை

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்தில் கண்டியூருக்குக் கிழக்கே சுமார் 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது திருவேதிக்குடி. இவ்வூரின் கிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் மூலவராக வேதபுரீஸ்வரர் உள்ளார். மூலவருக்கு ஆராவமுது நாதர், வாழைமடுநாதர் என்ற பிற பெயர்களும் உண்டு. இக்கோயிலின் இறைவனாக வேதபுரீஸ்வரர் இருக்கிறார் (படம்.1). இறைவியாகப் பிரகாரத்திற்கு வெளியில் தனி சன்னதியில் மங்கையர்கரசி அருள்பாலிக்கிறாள் (படம்.2). அண்மையில் இத்திருக்கோயிலில் கள ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் திருக்கோயிலின் தொன்மை வரலாறு, கல்வெட்டுகள், கட்டடக்கலை, சிற்பக்கலை போன்ற மரபுசார் கலைகளை வரலாற்று நோக்கில் ஆவணப்படுத்தி விளக்குகிறது இக்கட்டுரை.

### வரலாற்றுச் செய்திகள்

இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையானது இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளைக் கண்டறிந்து, இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை 1895, 1969 ஆகிய தொகுதிகளில் சில கல்வெட்டுகளையும், தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி-5இல் சில கல்வெட்டுகளையும் வெளியிட்டுள்ளது. இவற்றைத் தொடந்து, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் 2005இல் வெளியிட்டுள்ள தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1இல் சில கல்வெட்டுகள் முழு வாசகத்துடன் வெளியிட்டுள்ளனர். இக்கோயிலில் முதலாம் அதித்தன் கி.பி 896, முதலாம் பராந்தகன் கி.பி.910, முதலாம் இராசாசன் கி.பி.899, கி.பி.990, கி.பி.1004 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த மன்னர்களின் கல்வெட்டுகள் மற்றும் கி.பி.9-10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் தற்பொழுது அழிந்த நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது. இக் கல்வெட்டுகள் இறைவனை திருவேதிக் குடி மகாதேவர் என்றும், பரகேசரிபுரத்து மகாதேவர் என்றும், குறிப்பிடுகின்றது (SII, Vol.5, 622, 624:1925). இக்கோயில் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை திருவேதிக்குடி மகாதேவருக்கு இரவுபகலாக நொந்தாவிளக்கெரிப்பதற்குப் பொன் தானமாகக் கொடுத்ததையும், வியாபாரிகள் மகாதேவருக்கு வாள், சுடர்வாள் கொடுத்த செய்தியையும் குறிப்பிடுகின்றன. மேலும் இக்கோயில் மேற்கு புற ஜகதியில் உள்ள முதலாம் ஆதித்தன் கல்வெட்டில் நில எல்லைகளை முறையாக அளந்து குறிப்பிடுவதற்கு நிலம் அளக்கும் கோலான பதின் கோலால் இராயிரத்து ஐநூற்று அறுபது குழி என்று குறிப்பு வருகிறது (தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,2005,ப.37). இக்கோல் பதிநான்கு கோல் என்ற அளவாக இருக்கலாம். சோழர் காலத்தில் நிலங்களை முறையாக அளப்பதற்கென்று தனியாக கோல் என்ற தனி அளவீடு இருந்ததையும், இதன் வாயிலாக நிலங்கள் முறைபடுத்தப்பட்டு அளக்கப்பட்டதையும் அறியமுடிகிறது.

### தல வரலாறு

வேதி என்பது பிரமனைக் குறிக்கும். பிரம்மன் வழிப்பட்டதால் வேதிக்குடியானதாகச் சொல்லப்படுகிறது. விழுதிக்குடி மருவி வேதிக்குடி ஆனது. பிரம்மாவிடம் இருந்த வேதங்களை, அசுரன் ஒருவன் எடுத்துச் சென்று கடலுக்கடியில் மறைத்து வைத்தான். அதை மகாவிஷ்னு மீட்டு வந்தார். அசுரனிடம் இருந்ததால் உன்டான தோசம் நீங்க, வேதங்கள் சிவனை நோக்கி இத்தலத்தில் தவமிருந்ததனால் சிவனும் வேதங்களைப் புனிதப்படுத்தினார். வேதங்களின் வேண்டுகோளை ஏற்று இத்தலத்தில் சிவபெருமான் வேதபுரீஸ்வரராக எழுந்தருளினார். ஊருக்கும் திருவேதிக்குடி என்ற பெயர் ஏற்பட்டு பின்பு வேதிக்குடி என மருவியது. வேதங்களை மீட்டுக்குடுத்த சிவபெருமானை இத்தலத் தில் பிரம்மாவும் பூஜித்துள்ளார். இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடப் பெற்ற தலமாகும். திருவையாறு சப்தஸ்தானத்தில் இத்தலமும் ஒன்று. திருவையாறைத் தலைமை தலமாகக் கொண்டு விளங்கும் சப்தஸ்தானத் தலங்களில் இத்தலம் நான்காவது தலமாகப் போற்றப்படுகிறது. திருமணத்தடை இருப்பவர்கள் இத்தலத்தலத்திற்கு வந்து வழிபட்டால் திருமணத்தடை நீக்கும் என்பது நம்பிக்கை. இத்திருக்கோயிலின் தலவிருட்சமாக வில்வ மரமும், திர்த்தமாக வேத தீர்த்தமும் குறிப்பிடப்படுகின்றன.

### கட்டடக் கலை

கருவறை, அர்த்த மண்டபம், இடைநாழிகை, மகா மண்டபம் மற்றும் முன் மண்டபங்களுடன் கிழக்கு நோக்கியவாறு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது(படம்.3). கருவறையானது 6.15 மீட்டர் நீளத்தையும் 6.42 மீட்டர் அகலத்தையும் கொண்டு

அமைக்கப்பட்டுள்ளது. மூலவர் அமைந்துள்ள கருவறையின் நுழைவு வாயில் 80செ.மீ அகலத்தைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு புறச் சுவர்களிலுள்ள கோட்டங்களின் அமைப்பு இரண்டு அரைத்தூண்களுடன் இரட்டைகல் பஞ்சர அமைப்பைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கருவறைக்கு முன்புள்ள அர்த்த மண்டபத்தில் நான்குத் தூண்கள் உள்ளன. இரண்டு அரைத்தூண்கள் கருவறை சுவர் கட்டுமானத்திலேயே காட்டப்பட்டுள்ளன. இந்த அர்த்த மண்டபத் தூண் அமைப்பானது தெற்கு வடக்கில் ஒரு மீட்டர் இடைவெளியும், கிழக்கு மேற்கில் 1.3 மீட்டர் இடைவெளியும் கொண்டவையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்த தூண்கள் நீள் சதுர எண்பட்டை, கலசம், கண்டம், கிரீவம், குடம், மற்றும் விரிந்த தாமரை இதழ்களைக்கொண்ட பலகை அமைப்பைக் கொண்டுள்ளது. தூண்களின் அடிப்பகுதி நான்கு பக்கமும் சதுர வடிவில் 25 செ.மீ அளவை கொண்டவையாக உள்ளன. அர்த்த மண்டபமானது 4.7 மீட்டர் நீளத்தையும், 2.05 மீட்டர் அகலத்தையும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த நிலையில் உள்ள மகா மண்டபமானது 10 மீட்டர் நீளத்தையும், 6.5 மீட்டர் அகலத்தையும் கொண்டு 15 தூண்களை உள்ளடக்கியவையாக அமைந்துள்ளது.

மகா மண்டபத் தூண்கள் வெட் டுப்போதிகை அமைப்பில் காணப்படுகின்றது. இதற்கு அடுத்த நிலையிலுள்ள முகமண்டபம் 11.85 மீட்டர் நீளத்தையும், 6.65 மீட்டர் அகலத்தையும் கொண்டு 33 தூண்களை உள்ளடக்கியவையாக அமைந்துள்ளது. இக்கோயிலின் உள் கட்டமைப்பானது நான்கு பக்கங்களும் பிரகார அமைப்பைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்கள் வெட்டுப்போதிகை அமைப்பையும் எண்பட்டை மற்றும் பதினாறு பட்டை தூண்கள் அமைப்பையும் கொண்டுள்ளது.

### விமானத்தின் அமைப்பு

இக்கோயிலின் விமான அமைப்பானது இரண்டு தளங்களும் கருங்கற் கட்டமைப்பைக்கொண்டு வேசர பாணியில் அமைந்துள்ளது. விமானத்தின் அடித்தளக் கட்டமைப்பானது 6.15 மீட்டர் நீளத்தையும், 6.42 மீட்டர் அகலத்தையும் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் கருவறை முன்னுள்ள அர்த்த மண்டபத் தூண்களின் அமைப்பு, விமானத்தின் அமைப்பு மற்றும் இக்கோயிலில் கிடைக்கும் முதலாம் ஆதித்தன் கல்வெட்டைக்கொண்டு பார்க்கும்பொழுது இக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப்பட்டவையாகத் தெரிகிறது.

### கோபுர அமைப்பு

வேதபுரீஸ்வரர் கோயிலின் முன் கோபுரமானது திருக்கோயிலின் வளாகச் சுவருக்கு உள்ளும் வெளியிலும் காட்சியளிக்கின்றது. இக்கோபுரமானது ஒரு தள அமைப்பைக் கொண்டுள்ளது. இதன் அடித்தளக் கட்டுமானமைப்பானது 5.80 மீட்டர் நீளத்தையும், 7.75 மீட்டர் அகலத்தையும் கொண்ட அளவில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரமானது சுமார் 35 அடி உயரத்தில் காட்சியளிக்கின்றது.

### மங்கையர்கரசி சன்னதி (தனிச்சன்னதி)

கோயில் வளாகத்திற்கு முன் வடக்கு புறமாக மங்கையர்கரசிக்கு (இறைவி) என்று தனிச்சன்னதி (கோயில்) அமைக்கப்பட்டுள்ளது. முதன்மைக் கோயிலில் மூலவரான வேதபுரீஸ்வரருக்குக் கட்டப்பட்டுள்ள விமானத்தைப் போன்று இந்த மங்கையர்கரசி சன்னதிக்கும் விமானம், கருவறை,

அர்த்த மண்டபம் மகா மண்டபம் என்ற கட்டுமான அமைப்புகளுடன் சன்னதி தனிக்கோயிலாகக் கருங்கற் கட்டமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் முதல் கோபுரத்திலிருந்து கிழக்குபுறத்தில் 15 மீட்டர் இடைவெளியில் இச்சன்னதி கட்டமைக்கப்பட்டுள்ளது. மங்கையர்கரசி இருக்கும் கருவறையானது 4.75 மீட்டர் நீளத்தையும், 4.93 மீட்டர் அகலத்தையும் கொண்டவையாகக் கீழ் கட்டுமான அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபம் 3 மீட்டர் நீளத்தைக் கொண்டவையாகவும், மகா மண்டபம் 7.57 மீட்டர் நீளத்தைக் கொண்டவையாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இச்சன்னதியின் கோட்டமைப்பில் கோட்டத் தெய்வங்கள் எதுவும் காணப்படவில்லை. மங்கையர்கரசி சன்னதியின் வெளிப்புறக் கட்டுமானங்கள் சிதிலமடைந்து காணப்பட்டவையால் 2014 மார்ச் திங்களில் திருப்பணி நடைபெற்ற போது இச்சன்னதி மற்றும் வேதபுரீஸ்வரர் கோயில்அனைத்துப்பகுதிகளும்புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

### வசந்த மண்டபம்

மங்கையர்கரசி சன்னதிக்குச் சற்று மேற்கு புறத்தில் மண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபமானது 7.85 மீட்டர் நீளத்தையும், 9.20 மீட்டர் அகலத்தையும் கொண்டவையாக செங்கற் கட்டமைப்பில் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் மேல்பகுதி கூண்டு வடிவத்தில் வடிவமைத்துக் கட்டப்பட்டுள்ளது. இதற்கு வசந்த மண்டபம் என்ற பெயரும் உண்டு. இம்மண்டபம் மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டவையாக இருக்கலாம்.

### தூண்கள்

இத்திருக்கோயிலின் நடராஜர் மண்டபத்தில் (கிழக்கு பிரகாரம்) 27 தூண்கள் உள்ளன. முக மண்டபத்தில் 33 தூண்கள் உள்ளன. மகா மண்டபத்தில் வெட்டு போதிகை அமைப்பைக்கொண்டு 15 தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. மகா மண்டபத்தின் நுழைவாயில் 1.2 மீட்டர் அகலத்தைக் கொண்டும், தெற்கு, வடக்கு கிழக்கு மற்றும் மேற்கு புறங்களில் ஒவ்வொரு தூண்களுக்கும் இடைவெளியாக 88 செ.மீ அளவைக் கொண்டும், 1.5 மீட்டர் மற்றும் 3.7 மீட்டர் அகலத்தைக் (தெற்கு-வடக்கு) கொண்டும் மகா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு முன் உள்ள அர்த்த மண்டபத்தில் நான்கு தூண்களும், இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. இத்தூண்களின் அமைப்பானது தெற்கு வடக்கில் ஒரு மீட்டர் இடைவெளியும், கிழக்கு மேற்கில் 1.3 மீட்டர் இடைவெளியும் கொண்டவையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்த தூண்கள் நீள் சதுர எண்பட்டை, கலசம், கண்டம், கிரிவம், குடம், மற்றும் விரிந்த தாமரை இதழ்களைக்கொண்டபலகைஅமைப்பைக் கொண்டுள்ளன. தூண்களின் அடிப்பகுதி நான்கு பக்கமும் 25 செ.மீ அளவைக் கொண்டவையாக உள்ளன. தெற்கு பிரகாரத்திலுள்ள ஒவ்வொருதுண்களுக்கும் 1.5 மீட்டர் இடைவெளியாகக்கொண்டு 23 தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மேற்கு பிரகாரத்திலும் 1.5 மீட்டர் இடைவெளியில் ஒரு தூண் என்ற அமைப்பில் 12 தூண்களும், வடக்கு பிரகாரத்தில் அதே 1.5 மீட்டர் இடைவெளியில் 19 தூண்களும் காணப்படுகின்றன.

### சிற்பக் கலை

முதல் கோபுரத்தின் கீழ் பகுதியில் வலது இடது புறங்களில் துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. வலது புறமுள்ள துவாரபாலகர் சிற்பத்திற்கு சற்று மேல் காலிங்க நர்த்தனவிநாயகர் சிற்பமும் உள்ளது. நடராஜர் மண்டபத்தில் உள்ள இரண்டு தூண்களில் காலிங்கநர்த்தன விநாயகர் சிற்பமும், லட்சுமியுடன் விநாயகர் சிற்பமும் உள்ளன. இம்மண்டபத்தின்

வடக்கு பகுதியில் அம்பாள் சிற்பம் ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது. முன்மண்டபத்தின் வலது இடது புறங்களில் 108 லிங்கங்கள் வைத்து அமைக்கப்பட்டுள்ளன. முக மண்டபத்தின் வலதுபுறத்தில் மகா விநாயகர் சிற்பமும் இடதுபுறத்தில் சுப்ரமணியர் சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளன. முக மண்டபத்தின் வடக்கு தெற்கு இரு புறங்களிலும் லிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகா மண்டபத்தில் நந்தி சிற்பமும் பலிபீடமும், வலது புறத்தில் வேத விநாயகர் சிற்பமும் (படம்.4) உள்ளன. கருவறை முன்புள்ள அர்த்த மண்டபத்தில் வலது இடது இரு புறங்களிலும் துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. கருவறையில் வேதபுரீஸ்வரர் மூலவர் உள்ளார்.

## விமானத்திலுள்ள சிற்பங்கள்

விமானத்தின் தெற்குபுறத்திலுள்ள முதல் தளத்தில் முறையே வலது இடது புறங்களில் நான்கு ஆண் படிவங்கள் உள்ளன. இரண்டாவது தளம் பஞ்சரத்தில் தெட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. கிரீவப் பகுதியில் இரு பக்கங்களிலும் நந்தியுடன் ரிஷபவாகனர் சிற்பம் உள்ளது. விமானத்தின் மேற்குப் புறத்தில் முதல் தளத்தில் முறையே இரு பக்கங்களிலும் ஆண் படிவங்களுடன் பிரம்மா சிற்பம் உள்ளது. இரண்டாவது தளத்தில் இரு பக்கங்களிலும் நந்தியுடன் பிரம்மா சிற்பமும் உள்ளது. விமானத்தின் வடக்குபுறத்தில் கிழக்கு பக்கத்தில் இரண்டு ஆண் படிமங்களும் மேற்கு பக்கத்தில் ஒரு ஆண்படிமமும் ஒரு பெண்படிமத்துடன் பஞ்சரத்தில் பெண் சிற்பமும் உள்ளது. இரண்டாவது தளத்திலுள்ள பஞ்சரத்தில் தெட்சிணாமூர்த்தி தியாண நிலையில் அமர்ந்துள்ளார். கிரீவப் பகுதியில் இரு பக்கங்களிலும் நந்தியுடன் பிரம்மா சிற்பம் உள்ளது. விமானத்தின் முன் புறத்தில் இரண்டாவது தளத்தில் பஞ்சரத்தில் தெட்சிணா மூர்த்தி சிற்பம் தியான நிலையில் காட்டப்பட்டுள்ளது. கிரீவப் பகுதியில் சிவனும் பார்வதியும் இருப்பதைப் போன்று சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

## கோஷ்ட தெய்வங்கள்

தெட்சிணாமூர்த்தி சன்னதிக்கு இரு புறங்களிலும் இரண்டு பெண் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தெட்சிணாமூர்த்திக்கென்று இடைப்பட்ட காலத்தில் புதிய சன்னதி கட்டப்பட்டுள்ளது. இதில் தெட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. கருவறையின் பின் புறம் வலது இடது இரு புறங்களில் இரண்டு பெண் தெய்வங்களுடன் அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் உள்ளது. இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் மற்றத் தலங்களில் காணப்படுவதைப் போன்று இல்லாமல் அமைப்பில் மாறுபட்டு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக சிவத் தலங்களில் அர்த்தநாரீஸ்வரர் என்றால் சிவன் வலதுபுறமும், பார்வதி இடதுபுறமும் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு பார்வதி (பெண் உருவம்) வலது புறமும், சிவன் (ஆண் உருவம்) இடது புறமும் இணைந்துள்ள அர்த்தநாரீஸ்வரரைக் காணலாம் (படம்.5). இது தமிழகத்தில் பிறத்தலங்களில் காணக்கிடைக்காத ஒன்றாக உள்ளது. கருவறையின் வடக்கு புறத்தில் வலது இடது இரு புறங்களிலும் இரண்டு பெண் தெய்வங்களுடன் பிரம்மா (படம்.6) சிற்பமும், அடுத்ததாகத் துர்கை சிற்பமும் காணப்படுகின்றன. தனி சன்னதியில் சண்டிகேஸ்வரர் சிற்பம் உள்ளது.

## பிரகார தெய்வங்கள்

தெற்கு பிரகாரத்தில் 55 லிங்கங்கள் உள்ளன. மேற்கு பிரகாரத்தில் கன்னி மூல கணபதி சன்னதியில் மூலகணபதி உள்ளார். இதற்கு அடுத்தவையாக சோமஸ்கந்தர் சன்னதி உள்ளது. இதில் சிற்பங்கள் எதுவும் இல்லை. மேற்கு பிரகாரத்தில் சுப்பிரமணியர் சன்னதி உள்ளது. இதில் வள்ளி தெய்வானையுடன்

சுப்பிரமணியர் காட்சியளிக்கிறார். இவற்றோடு கஜலட்சுமி, லெட்சுமி நாராயணார், அனுமார் சிற்பங்களும் மேற்கு பிரகாரத்தில் உள்ளன. வடக்கு பிரகாரத்தில் 28 லிங்கங்கள் உள்ளன. வடக்கு பிரகாரத்தில் தெற்கு நோக்கி நடராஜர் சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் நடராஜர் சன்னதியில் நடராஜர் சிற்பம் காணப்படவில்லை. இச்சன்னதியின் அருகே கிழக்கு பக்கத்தில் அம்பாள் சிற்பம் உள்ளது. கிழக்கு பிரகாரத்தில் சப்தஸ்தான ஸ்தல லிங்கங்கள் 7 உள்ளன. இதன் அருகே பைரவர் சிற்பமும், சூரியன் சிற்பமும் மேற்கு நோக்கி அமைந்துள்ளன. பிரகாரத்தின் வெளியில் உள்ள மங்கையர்கரசி சன்னதியில் (தனி சன்னதி) முக மண்டபத்தில் நந்தியும், இதற்கு அருகில் கிழக்கு புறத்தில் பிரம்மி பெண் தெய்வ சிற்பமும் உள்ளன. கோபுரத் திற்கு முன் புறத்தில் முதலில் பலிபீடமும், நந்தியும் உள்ளது. எனவேதான், தொன்மையானக் கோயில்கள் இறை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கலை, வரலாறு மற்றும் பண்பாடுப் பதிவுகளை வெளிப்படுத்தும் கருவூலமாகவும் விளங்குகின்றது (ஆ.ராஜா, 2020, பக்.22-27). அதே போன்று இக்கோயிலிலுள்ள அனைத்துத் தரவுகளும், குறிப்பாக மரபுசார்ந்த கட்டடக்கலையும், சிற்பக்கலையும் சோழர்களின் தனித்துவம் வாய்ந்த மரபுச்செல்வங்களுக்கு காட்டாக அமைந்துள்ளன.

## திருவிழா

ஆண்டுதோறும் பங்குனி மாதம் 13,14, 15 ஆகிய தேதிகளில் சூரியனுடைய கிரணங்கள் சிவலிங்கத்தின் மீது படுகின்றது. சூரியன் ஈசனை பூஜைசெய்வதாக ஐதீகம். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் சித்திரை பௌர்ணமிக்கு அடுத்த நாள் திருவிழா நடைபெறும்.

## முடிவுரை

இத்திருக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள், கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றை நோக்கும் போது இத்திருக்கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியாரால் தேவாரப்பாடல் பெற்றத் தலம் என்பதால், இக்கட்டமைப்புக்கு முன் இங்கு செங்கற் கற்கட்டமைப்பில் திருக்கோயில் அமைந்திருக்க வேண்டும். ஆகையால் தான் இத்தலம் இருவரின் தேவாரப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றது. இடைக்காலச் சோழர் காலத்தில் காவிரி வடகரையில் அமைந்துள்ள முதன்மையானத் திருத்தலங்களில் ஒன்றாக இக்கோயில் இருந்துள்ளது. சோழ மன்னர்கள் தங்களின் ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாகச் சோழநாட்டிலுள்ள நிலங்களை அளந்து வரைமுறைப்படுத்துவதற்கு பொதுவான ஒரு நில அளவு முறையைப் பயன்படுத்தியுள்ளனர். அத்தகைய நில அளவுக் குறியீடு இக்கோயில் மேற்கு புற ஜகதியிலுள்ள கல்வெட்டு ஒன்றில் பதின்கோல் என்று பொறிக்கப்பட்டுள்ளது. பிற்காலங்களில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆளும் வர்க்கத்தினர் வெவ்வேறு விதமான நில அளவு முறையினைப் பயன்படுத்தி, நிலங்களை வகைப்படுத்தியுள்ளனர். அந்நிலங்களுக்கு வரியும் விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விதிக்கப்பட்ட வரி வருவாயானது அரசின் பிரதான வருவாயாகக் கருதப்பட்டுள்ளது.

## துணை நூற்பட்டியல்

1. ஸ்ரீதர். தி.ஸ்ரீ. (2005). *தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1*, சென்னை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
2. ராஜா, ஆ. (2020). *கலை, பண்பாட்டுத் தளத்தில் சோமேஸ்வரர் திருக்கோயில்*, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி-5, E.-ISSN:2582&2810.
3. (1895). Annual report of Indian Epigraphy, New Delhi, Archaeological survey of India, New Delhi.
4. (1969). Annual report of Indian Epigraphy, New Delhi, Archaeological survey of India.

5. (1925). South Indian Inscritions, Vol. 5, Archaeological survery of India. New Delhi, Nos.622&625.



படம்.1, திருவேதிக்குடி- கருவறையில் வேதபுரீஸ்வரர்



படம்.2, திருவேதிக்குடி - அம்மன் சன்னதி கருவறையில் மங்கையர்கரசி



படம்,3. திருவேதிக்குடி - வேதபுரீஸ்வரர் திருக்கோயில் முழுத் தோற்றம்



படம்.4.திருவேதிக்குடி - வேதபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத்தில் வேதவிநாயகர்



படம்.5, திருவேதிக்குடி - அர்த்தநாரீஸ்வரர் (கோஷ்ட தெய்வம்)



படம்.6, திருவேதிக்குடி - பிரம்மா (கோஷ்ட தெய்வம்)